Koviloor Digital Library

உ

சிவமயம்.

குமாரவேள்துணை.

ACC.NO.
4400





மதுரை:

மதுரஞ் சுந்தரபாண்டியனார்

பாடிய

முருகக்கடவுள்

வாழ்த்துத் திருவகவலும்

பழநி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

K. S. சுந்தரசாமிஐயர் அவர்கள்

வரைந்துள்ள

குறிப்புரையும்.

இவை

ஷை மதுரஞ் சுந்தரபாண்டியனார்

மதுரைத்

திருவருட்கழகத்தாரால்

வெளியிடப்பெற்றது.


1933.

விலை] All Rights Reserved. [அணா 4.

2158/7.

Koviloor Digital Library


Koviloor Digital Library



உ

சிவமயம்.

குமாரவேள்துணை.



மதுரை:

மதுரஞ் சுந்தரபாண்டியனார்

பாடிய

முருகக்கடவுள்

வாழ்த்துத் திருவகவலும்

பழநி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

K. S. சுந்தரசாமிஐயர் அவர்கள்

வரைந்துள்ள

குறிப்புரையும்.

இவை

ஷை மதுரஞ் சுந்தரபாண்டியனார்

மதுரைத்

திருவருட்கழகத்தாரால்

வெளியிடப்பெற்றது.

1933.

விலை] All Rights Reserved. [அணா 4.

Koviloor Digital Library



Koviloor Digital Library

கடவுள் துணை.

முன்னுரை.

முருகக்கடவுள் வாழ்த்துத் திருவகவல் என்னும் இப்பிரபந்தம் முடிகெழு வேந்தர் மூவருள் ஒருவனுன தென்னவன் பாண்டித் திருநகரென்று பன்னிலம் புகழப்படுவதும் முழுதுலகளிக்குந் தொழுதகு சத்தியும், குன்றவில் லேந்திய மன்றவாணனும், குன்றமெறிந்த குமரவேளும் செங்கோல் செலுத்திய சிறப்பினையுடையதும் என்னையாளுடைய முன்னவன் மேனாள் ஆடலறுபானுன் காற்றப்பெற்றதுமான தொன்மைசான்ற மாடமதுரை வளம்பதியதனிடை, சைவவேளாண் மரபிற்றோன்றியோராயும், மதுரைத் திருவாலவாயுடையார் திருக்கோயிலிற் புடையார்நிருவாகமும் மூன்றுவது மரியாதையும் பெற்றுவருவோராயும், அம்பிகை முருக னீசனடிமலர்த் தொண்டினேடு, சமயபத்தி அடியார் பத்தி நெறிமுறையுடையராயும் தமிழிலக்கணங்களுட் டலைசிறந்ததான தொல்காப்பியமுதற் பல்காப்பியங்களும் இயற்றமிழ்நூல் முதலிய மும்மைத் தமிழ் நூல்களும் சித்தவைத்திய மணிமந்திரமாதிய யோகஞான நூல்களும் சைவசித்தாந்த சாத்திரங்களும் அத்துவித வேதாந்த சாத்திரங்களும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்தோராயும் "கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச், செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்-சொல்வளம், மல்லல் வெறுக்கையா மாணவை

Koviloor Digital Library

மன்றாடுக்கும், செல்வமு முண்டு சிலர்க்கு" என்றபடி அரும்பெரு நூல்களை யாராய்தலிலும் எழுதுதலிலும் செய்யுள்யாத்தலிலும், சொற்பொழிவாற்றலிலும்வல்லுநராயும் பொழுதுபோக்குவோராயும் விளங்கும் மதுரைத் திருவருட் கழகத் தலைவரான திருமான், மதுரஞ்சுந்தரபாண்டியனாரவர்களாலியற்றப்பட்டது. இஃது குன்றுதோறாடுங் குமாரப் பெருமான் கோயில்கொண்டருளியுள்ள திருத்தலங்கள் இவையிவை யென்பதை யாவருமெளிதிலறிந்து ஆங்காங்குச் சென்று அப்பெருமானை வழிபட்டுத் திருவருளெய்துதற்கு ஒரு வழிகாட்டியாகவுள்ளது. திருப்பரங்குன்றை முதன்மையாகக்கொண்டு மதுரை திருப்பூவணம் முதலிய தலங்கள் நூல்வழிச் செல்லுமாறே வலச்சுற்றாக வந்து பழமுதிர் சோலைமலை யிறுதியாகப் பிரணவாகாரமாக வமைத்திருத்தலே இதற்குரிய ஸ்தலமுறையென்பது பெறுதற்குரிய தென்பதை நினைப்பிற்குக் கொண்டுவருகின்றதையும் சிந்திக்கத்தக்கது. இதிற்சொன்னயம்பொருணய முதலியபன்னயங்களுஞ் செறிந்திருப்பதுடன் பக்திச்சுவையுமிக்குக் கனிந்துள்ளது. இதற்குப் பழநிக்கு அடுத்துள்ள கலயம்புத்தூர்க்கண்ணே பிராமணவருணத்திற் றோன்றியவரும் சதாசார சீலரும் ஆவிநன்குடியென்னும் பழநி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ K. S. சுந்தரசாமி ஐயரவர்களால் ஒரு குறிப்புரையும் எழுதப்பட்டுள்ளது. படிப்போருக்கின்பம் பயப்பது. "குடிப்பிறப்புக் கல்வி குலம் வாய்மை தூய்மை, நடுச்சொல்லு நன்கணி" யாக்கொண்ட இந்நூலாசிரியரின் சங்கநூலாராய்ச்சியும் சொல்வன்மையும் பிறர்க்கெடுத்துக்கூறும் போதனா சக்தியும் உடனிருந்தறிந்தோர் பாராட்டாநிரார்.

Koviloor Digital Library

இவ்வாற்றலுடையார் இதுபோன்று இன்னும் பல நூல்களை யாக்கித் தந்து உலகத்தை மகிழ்விக்கும் வண்ணம் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளாகிய ஸ்ரீசோமசுந்தரப்பெருமானும் மீனாம்பிகையும் இவர்கட்கு அரோக திடகாத்திரம் ஆயுட் பூரணம் முதலிய எல்லா நலங்களையுந் தந்தருளும்வண்ணம் அன்னோரை மனமொழி மெய்களால் சிந்தித்துத் துதித்து வந்திக்கின்றேன்.

சு. நல்லசிவன் பிள்ளை,
ஆசிரியர் மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை,
மதுரை.

Koviloor Digital Library

மதுரைச் சுந்தரபாண்டியனார்

மதுரைத் திருவருட்கழகம்.

இந்நூற்பதிப்பிற்குப் பொருளுதவி செய்த நன்கொடையாளர்களான ஷை கழகத்தாரின் பெயர்கள்.

---

1. மகா-ள-ள-ஸ்ரீ R. துரைசாமிநாயுடு அவர்கள்,
மதுரை வகையரா தேவஸ்தானம்டிரஸ்டி மதுரை. ரூ. 5.

2 ,, ராம. மெ. சித. வைரவன்செட்டியாரவர்கள்
தேவகோட்டை. ரூ. 5.

3 ,, அரு. லெ. நா. லெ. நாராயணன் செட்டியார்
அவர்கள் தேவகோட்டை. ரூ. 5.

4 ,, M. C. சதாசிவம்பிள்ளையவர்கள்,
தலைமை உபாத்தியாயர், எழுகடல்தெரு முனிசிபல் கலாசாலை, வடக்காவணிமூலவீதி, மதுரை. ரூ. 5.

5 ,, M. சுப்பிரமணியபிள்ளையவர்கள்,
ரிடையர்டு ஸ்கூல்மாஸ்டர் சௌராஷ்டிர ஹைஸ்கூல் வடக்காவணி மூலவீதி, மதுரை. ரூ. 5.

6 ,, இராமசாமிப்புராணிகர் அவர்கள்,
லாலாபுரம், திருமங்கலம் தாலூகா. ரூ. 5.

7 ,, R. யாழ்கீதசுந்தரம்பிள்ளை அவர்கள்,
பூஜாச்சாரியார், வடக்குக்கோபுரம், மதுரை. ரூ. 5.

8 ,, ஆர். எஸ். பதி. அவர்கள்,
மேலக்கோபுரம், ஆர். எஸ். பதி. அன் கோ., மேலமாசி வீதி, மதுரை. ரூ. 5.

Koviloor Digital Library

இந்நூலிற்கண்ட தலங்களமைந்த

நாடுகள், ஜில்லாக்கள், மலைகள், ஊர்கள், ஆறுகள், சுனைகள், தீர்த்தங்கள் முதலியன.

நாடுகளாவன.

1. பாண்டிநாடு.
2. ஈழநாடு.
3. சேரநாடு.
4. சோணாடு.
5. கொங்குநாடு.
6. தொண்டைநாடு.
7. மலைநாடு.
8. வாரக்கநாடு.
9. வடவர்நாடு(தெலுங்குநாடு)
10. துவாராவதிநாடு.
11. பறம்புநாடு.
12. நடுநாடு.
13. அளநாடு.
14. நாஞ்சிநாடு முதலியன.

ஜில்லாக்கள்.

1. மதுரை.
2. இராமநாதபுரம்.
3. இலங்கை.
4. திருநெல்வேலி.
5. கொல்லம்.
6. கோயம்புத்தூர்.
7. தென்னாறுகாடு.
8. வடஆறுகாடு.
9. சென்னை.
10. செங்கற்பட்டு.
11. கர்நூல்.
12. சேலம்.
13. தஞ்சை.
14. திருச்சி முதலியன.

மலைகள்.

1. திருப்பரங்குன்றம்.
2. புசுண்டர்மலை அல்லது கூடற்பறம்பு.
3. கதிர்காமம்.
4. திருக்கோணமலை.
5. அருக்கோணமலை.
6. மயேந்திரமலை.
7. மருத்துவாழ்மலை.
8. அகத்தீச்சுரமலை.
9. பொதியமலை.
10. திருமலை.
11. திருக்குற்றாலமலை.
12. சிவசைலம்.
13. கழுகுமலை.
14. சிவகிரி.
15. நாகமலை.
16. திடியமலை.
17. சையமலை.
18. கடமலைக்குன்று.
19. சுருளிமலை.
20. சுவர்க்கத்துமலை.
21. அகமலை.
22. பெரியூர்மலை.
23. பூம்பாறை (கொடைக்கானலிலுள்ளது)
24. கொடைக்கானல்மலை.
25. வில்லுப்பட்டிமலை
26. முருகமலை.
27. தென்பழநிமலை(பொதினி என்னும் பழம் பெயர்
28. பழநிமலை. (கொண்டது.

Koviloor Digital Library

29. ஆய்க்குடிமலை.
30. வெண்ணெய்மலை.
31. புகழிமலை அல்லது ஆறு நாட்டார் மலை.
32. சென்னிமலை.
33. திருச்செங்கோடு.
34. வள்ளிமலை.
35. இணாற்றுக்கடவு.
36. மருதமலை.
37. ஊதிமலை.
38. குமாரமலை.
39. கொங்கணமலை.
40. சிரவணம்பட்டி இரத்தின கிரி.
41. திருவண்ணாமலை.
42. மயிலம்.
43. திருத்தணிகை.
44. திருவேங்கடமலை.
45. சிபருப்பதம்.
46. சுவாமிமலை.
47. குடகுமலை.
48. கொல்லிமலை.
49. தோகைமலை.
50. விராலிமலை.
51. புல்வயல்மலை.
52. குன்றக்குடி.
53. பிரான்மலை.
54. கரந்தைமலை.
55. பாரிபறம்புமலை.
56. பழமுதிர்சோலை முதலியன.

கோயில் கொண்டுள்ள தலங்களாவன.

1. மதுரை.
2. திருப்பூவணம்.
3. திருப்பாலையூர்.
4. கல்லுமடை.
5. மூடக்கங்குளம்.
6. வீரக்குடி.
7. கொடுமளூர்.
8. இராமேச்சுரம்.
9. திருச்செந்தூர்.
10. நாங்குநேரி.
11. வள்ளியூர்.
12. குமாரர்கோயில்.
13. அரிப்பாடு.
14. சிங்கம்பட்டி.
15. திருநெல்வேலி.
16. குறுக்குத்துறை.
17. குமராபுரம்.
18. சிவகிரியூர்.
19. தேவதானம். (சேற்றூர்)
20. பேறையூர்.
21. புத்தூர்.
22. திருமாணிக்கம்.
23. அரிகேசரி (சின்னமனூர்)
24. சீர்த்தத்தொட்டில்.
25. திருக்குளந்தை (பெரிய குளம்.)
26. ஆவிநன்குடி.
27. பழநிநகர்.
28. மயிலரங்கம்.
29. பொதினி.
30. கரூர்.
31. புகழி.
32. திருமுருகன்பூண்டி.
33. திருஅவிநாசி.
34. தென்சேரி.
35. திருப்போரூர்.
36. கந்தகோட்டம் (சென்னை)
37. வேலூர்.
38. குமரக்கோட்டம் (காஞ்சி)

Koviloor Digital Library

39. எட்டுக்குடி.
40. சிக்கல்.
41. புள்ளிருக்குவேளூர் அல்லது வைத்தீஸ்வரன்கோயில்.
42. திருவிடைமருதூர்.
43. தென்கடம்பன்றுறை.
44. ஏழைச்சாமிநாதர்கோயில் (கும்பகோணம்)
45. வயலூர்.
46. துவராபதி. அல்லது (செருவீடுதுவராபதி.)
47. பூவாழுர்.
48. பெரியூர் முதலியன.

ஆறுகளாவன.

1. வையை.
2. பொருநை.
3. கருநை.
4. ஆண்பொருநை.
5. தேனி.
6. பவானி.
7. காவிரி.
8. வரட்டாறு.
9. சுருளியாறு.
10. வாராகநதி முதலியன.

சுனை, தீர்த்தங்கள் ஆவன.

1. பனியின்மெல்லிய கூவம்.
2. பூவின்மெல்லிய கூவம்.
3. வைத்தியகூவம்
4. மெய்ம்மை நீர் (சத்திய கூவம்.)
5. வேல்பிளந்தசுனை. இதனைக் குண்டுநீர்ச் சுனை, கங்கைத் தீர்த்தம், காசி விசுவநாதர் சுனை என வழங்குவர்.
6. யானைச்சுனை.
7. குதிரைச்சுனை.
8. கடம்புநீர்ச்சுனை.
9. சரவணப்பொய்கை.

இவை திருப்பரங்குன்றத்தன்ளன.

10. நாகதீர்த்தம்.
11. கலுழுதீர்த்தம்.
12. கல்லூற்று.
13. புல்லூற்று.

14. அலைவாய்க்கரை—திருச்செந்தில் வதனாரம்பத் தீர்த்தக் கட்டம்.

15. குறக்குத்துறை—பொருநையாற்றின் தீர்த்தக்கட்டம்.

16. நற்குளநீர்—கழுகுமலைக்கோயிற்சந்நிதியின் வடபாலுள்ளது.

17. மாவூற்று—வையைதோன்றும் சையமலைவடகீழ்பாலுள்ள கடமலைக்குன்றென்னும் மலைமேலுள்ளது. இந் நீரோட்டத்திற் படுவதான தழைகுழைகள் மணலாகவும், மரங்களின் வேர்கள் கல்லாகவும் மாறுவன காணலாம். முருகக்கடவுள் கோயிலுக்குத்

Koviloor Digital Library

தென்பாலுள்ள தீர்த்தம். இத்தலத்துள் அர்ச்சிபட்டுத் தங்கப் படாது. இரவு மூன்றுஞ்சாமத்திற்குமேற் சென்றுதான் சேவை செய்யலாம்.

18. கன்றாகுநீர்முத்து—இது சுருளிமலையில் முருகக்கட வுள் வீற்றிருக்கும் கன்மரத்தினின்று இரவும் பகலும் ஓயாது இவை தோறுமுள்ள கற்றுக்கன்றுலையினின்று வெண்முத்தம்போன்று நீர்தங்கிச் சிந்தும் தன்மையுடையது. முருகக்கடவுள் திருமேனி யில் தாவிக்கொண்டிருக்கும் நீர்த்துளிகளாம். இதுதவிர பண்டாரத் துறை என்ற சுருளியாற்றுத் தீர்த்தக்கட்டமொன்றும் பாலருவி யென்ற உயர்ந்த அருவியொன்றும் நீராடுந் தீர்த்தங்களாகவுள்ளன.

19. தேனித்தென்பால்—(வீழ்நீர்) இது தேனி ஊர்க்கும் போடிநாயக்கன் ஊர்க்கும் இடையேயுள்ள சாலைமார்க்கத் 'தீர்த்தத் தொட்டில்' எனவழங்கும் தீர்த்தக்கட்டம். அருவிபோல் என்றும் ஓயாது வீழ்ந்துகொண்டிருப்பது.

20 குளந்தைத்தீர்த்தம்-பெரியகுளமென்னும் தீர்த்தம். இது பாண்டியனுக்கு மந்திரிகளாகிய பன்றிக்குருளைகளால் அத்தலத்து முருகக்கடவுட்கு ஆக்கிய அபிடேகத்தீர்த்தம்.

21. நீலமலர்ச்சுனை—இதனை நீலச்சுனை என்று வழங்குவர். இது திருத்தணிகை மலையிலுள்ள தீர்த்தம். தலபுராணத்தாலறிக.

22. மாறாச்சுனை—என்பது நீர்மாறாத மலர்ச்சுனையாகும். வேள்பாரிபறம்பு மலைமேலுள்ளது. அங்குள்ள முருகவேட்கு நீராட்டுந்தீர்த்தம். இது கபிலரும் ஏனைச்சங்கப் புலவரும் பாடிய புகழமைந்த நீர்ச்சுனை.

Koviloor Digital Library

உ

முருகவேள் துணை.

முருகக்கடவுள்

திருத்தல வாழ்த்துத் திருவகவல்.

திருப்பரங்குன்றம்.

கற்பகவிநாயகர் துதி.

வெண்பா.

முந்துதமிழ் ஞாலத்தே முந்துமுரு கன்பதிதேர்
செந்தமிழ்சேர் வாழ்த்துத் திருவகவற்—குந்தறிவாங்
கற்பகக்கை மாமலர்த்தாள் கண்டுபர விப்பரங்குன்
றற்புதத்தை யானுகர்ந்தே னுங்கு.

நூல்.

நேரிசையாசிரியப்பா.

தானே யுலகெலா மாகிய தனிமுதல்
வானே கடந்தெழு வான்வளர் சோதி
ஆதியு மந்தமு மில்லா வருளிறை
பாதியு முழுது மாகிய பழம்பொருள்
பொறியும் புலனும் புலனறி கலைமர
பறியு மறிவுகொண் டறியொணாப் பேரறி
வாணோ வலியோ வரிவைகொ லோவெனக்
காணா தனைத்தினுங் கலந்தமெய்க் காட்சி
காலங் கடந்த கடந்ததோ ருணர்விற்
கோலங் கடந்த கோதறு குணக்குன்

Koviloor Digital Library

றின்றென வுண்டென வன்றென வியைய
நின்றவை கடந்தோர் நினைப்பறு மெய்ந்நிலை
தெய்வப் பழமறை தெரித்துங் காணாச்
சைவப் பழம்பொரு ளாகிய தத்துவம்
குறியென வொன்றிற் குறித்துக் கொள்ளா
நெறிவழி நீத்தா ருறும்நிலை பேறு
குணநிறங் கடந்த குறைவிலா நிறைவு
மணமென மலரில் மலர்ந்த மலர்ச்சி
பாலினெய் யாகிப் பழத்திற் சுவையாய்ப்
பூலித் தருணலம் பூத்தமெய்ப் பொலிவு
ஓசையூ றொளிசுவை நாற்றமைந் தாயவற்
றோசைக் கப்பால் அசைவறு தனிநிலை
ஐம்பெருந் தொழிலுக் கப்புறத் தசையாச்
செம்பொரு ளாகிய சீருடைத் தெளிவு
மும்மலங் கழுவியுள் முளைத்தநா னென்னும்
விம்மிதச் செருக்கழித் தார்மிளிர் மேனிலை
எப்பொரு ளென்னினும் அப்பொரு ளாய்வில்
மெய்ப்பொரு ளாக விளங்குமெய் யாகொளி
எவ்வகைச் சமயத் தினுமினி திருந்தாங்
கவ்வவர்க் கவ்வண மாயமர் அருமை
இருவினைப் பிறப்பி னியன்றமா னிடவர்க்
குருவென வருவென உருவரு வென்ன
மூன்றுமா யெட்டா முழுமுத லான
ஆன்றதொல் சிறப்பமை யானந்த வெள்ளம்
அன்பினர் இறைஞ்சமெய் யன்பினுக் கிரங்கி
இன்பமு மிளமையு நீங்கா வெழிலுருக்

Koviloor Digital Library

கொண்டெழுந் தருளிக் குளிர்மலை யுலகிடை
யெண்டிசை யேத்தநன் கிருந்தவன் வாழ்க
கடம்பலர் சூடிக் கடம்பிடை மன்னி
உடம்பிடி யேந்திய வொருவன் வாழ்க
பனியின் மெல்லிய கூவமும் பனிதோய்
இனியபூ மென்மையி னியன்ற நீர்க்கூவமும்
புரிகுவர் பிணிதீர் புண்ணிய வருமருந்
தரியநீர் வைத்திய கூவத் துரிமையும்
பொய்மைதீர் இன்பம் புதுமையி னுக்கும்
மெய்மைநீர் படிவார்க் கருண்மெய்க் கூவமும்
குவடுபிளந் தெழுந்த குண்டுநீர்ச் சுனையும்
கவளக் கைமா கலிமாச் சுனையும்
கடம்பன்வீற் றிருந்த கடம்புநீர்ச் சுனையும்
இடும்பைதீர் சரவணப் பொய்கையி னெழிலும்
ஏனைச் சுனையொடு மீனத் தாபதர்
உயர்ந்தோர் பலரொடு கரந்துறை யுறையுளும்
இயைந்தாங் கிருந்தோர் இசைப்பரி பாடலும்
தன்பாற் கொண்டுயர் தென்பரங் குன்றெனுந்
திருப்பரங் குன்றிடைத் தேவியர் நாப்பண்
விருப்போ டமர்ந்தசெவ் வேள்நலம் வாழ்க
புசுண்டர் பறம்பிற் பொலிந்தோன் வாழ்க
விசும்பெழு கோபுரம் வியன்மா ளிகைமலி
தண்டமிழ் மதுரையிற் றமிழ்ப்பொருள் தேற
வண்டமிழ்ப் புலவோர்க் கருளினன் வாழ்க
பன்னிரு கண்ணுடைப் பண்ணவ னாகி
மன்னிய பேர்வுளர் வையையம் புனறோய்

Koviloor Digital Library

பூவண மதனிற் பொலிவொடு காண
ஓவற விருந்துவந் தொளிர்பவன் வாழ்க
அருஞ்சுரம் புகுந்தபொய் யாமொழிப் புலவனை
வருஞ்சுர வேடனாய் மறித்தொரு பாடலிற்
றென்றிருப் பாலை யூரிடைச் சிறந்து
நன்றருள் புரிந்தாள் நலத்தவன் வாழ்க
செல்லு மடைப்புனற் றிரண்டெழுந் தார்த்துக்
கல்லு மடையூர்க் கலந்தவன் வாழ்க
வான்மற மைந்தர் வணங்குவீ ரக்குடி
நாண்மர நீழற் றழைந்தவன் வாழ்க
முடுக்கங் குளத்தூர் முருகவேள் வாழ்க
இடுக்கண் டவிர்த்தா ளெம்மான் வாழ்க
கொடும ளூர்க்குடி கொண்டோன் வாழ்க
திடலி ராமேசந் திகழ்வோன் வாழ்க
கடல்சூ ழிலங்கைக் கதிர்கா மத்தினிற்
றொடர்பவ மாற்றுந் தூயோன் வாழ்க
திருக்கோண மலையிற் றிகழ்பவன் வாழ்க
அருக்கோண மலைவாழ் வானவன் வாழ்க
மலையக் கோமான் மகள்முகந் தோன்றநல்
கலைவாய்க் கரைமே லமுதினன் வாழ்க
நான்கு நேரியூர் நாடிய வழித்தா
மான்குல வள்ளியூர் மணாளன் வாழ்க
பொதியிற் றென்பாற் பொருந்து மயேந்திரத்
ததிசயம் பெறவிளங் கதிசயன் வாழ்க
மருத்துவாழ் மலைவாழ் மருத்துவன் வாழ்க
திருத்தகத் தீச்சுரத் தேவன் வாழ்க

Koviloor Digital Library

அகத்தியன் றருகரு ளாசா னெனத்தமிழ்
புகுத்திய பொதியப் பொருப்பினன் வாழ்க
நாடவ ரிறைஞ்சு கதிர்காமக் காட்டகத் தாக்
கூடிய குமாரர் கோயிலோன் வாழ்க
அரிப்பா டுடையமுன் னுதியன் வாழ்க
விரிப்பார்க் கட்டங்கா மேலவன் வாழ்க
பண்பொழிற் றிருமலைப் பண்ணவன் வாழ்க
விண்பொழி லிலங்கைப் பெருமான் வாழ்க
திருக்குற் றாலச் செழுஞ்சுடர் வாழ்க
பெருக்குற் றெழுநீர்க் கருணைப் பெருவளம்
கெழுமிய சிவமலை விழுமியோன் வாழ்க
இழுமெனத் திரண்டார்த் திறங்குநீர்ப் பொருனை
இடத்துமுன் னவனென் வலத்தவன் வாழ்க
சிங்கா வளந்திகழ் சிங்கையன் வாழ்க
வேய்ங்கா டெனும்நெல் வேலியி லறுமுகம்
பாங்குறக் காட்டும் பாங்கினன் வாழ்க
ஆற்றிடைக் குறுக்குத் துறைநிரம் பழகிய
போற்றருஞ் சிறப்பிற் புண்ணியன் வாழ்க
கற்குடைந் தியற்றிய கழுகு மலைக்குள்
நற்குள நீர்நலம் நயந்தவன் வாழ்க
குமரா புரந்திகழ் குமரவேள் வாழ்க
பிமிரங் கெடுத்தாள் பெரியவன் வாழ்க
சிவகிரி மேல்வளர் செழுஞ்சுடர் வாழ்க
பவங்கெடுத் தாண்டமெய்ப் பாவலன் வாழ்க
தவம்பெறு மேற்றடித் தேவத் தானச்
சிவம்பெறு கொழுந்தாய்த் திகழ்வோன் வாழ்க

Koviloor Digital Library

பேறைப் பதியிற் பிறங்கொளி வாழ்க
ஆறைந் தாரிற் கப்பால் வாழ்க
இடிய மீமிசைச் சேர்சதா நந்தர்
படியும் புத்தூர்ப் பரந்தவன் வாழ்க
திருமா ணிக்கத் திருத்தளிக் குள்விளங்
கொருமா ணிக்கத் தொளிர்வோன் வாழ்க
வையைச் சைய மலைவட கீழ்பால்
உய்யக் கடமலைக் குன்றுமா வூற்று
நீர்படு தழைமணல் நிழன்மர வேர்கல்
ஏர்பெற வாகிடத் தினிதிருந் தேத்துவர்
தங்குறை தீர்ந்துஞற் றெண்ணுட் டருநோன்
பங்குவந் தாற்றுங் கணுத்திற மருளிவிண்
ணூர்புகிரி யாட்டுத் தலைநா ளுயர்விழ
வார்தரக் கடங்கொண் டமர்பவன் வாழ்க
கவிழ்மரங் கல்லென வாகிக் கவினுற
வவிர்தருங் கிளைதொறு மண்மிக் கிடந்த
கணுவிடு நுண்டுளைக் கண்ணுரு நீர்முத்
தமிர லாகத்துச் சுருளியன் வாழ்க
அளநாட் டரிகே சரிநல் லூர்க்கண்
உளநாட் டியவெற் குட்புகுந் துறுதுணை
யாகிவிட் டகலா வரியவன் வாழ்க
பாகென வமிழ்தெனப் பாலெனத் தேனித்
தென்பால் விழ்நீ ரின்பினன் வாழ்க
நாகதிர்த் தத்தெழு நாகமா மலைக்கிழ்
வேகங்காட் டயில் வேலவன் வாழ்க
உவர்க்குநீ ருவரிசூ ழுலகத் துயர்வான்
சுவர்க்கத் தொருகற் றேன்றுவேள் வாழ்க

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM

அகமலை நீங்கா ததிசயப் பூவிரிவார்
திகலற விளையா டிலங்கொளிக் கோயில்
வளந்திகழ் மால்வரை வயலியம் பதிற்
குளந்தையுண் மேவிய குருமணி வாழ்க
பெரியூர் மலையிற் பிரியான் வாழ்க
விரிபூம் பாறை வெற்பினன் வாழ்க
கல்லுயர் கோடைக் கானற் புறத்தே
வில்லுப் பட்டியுள் விழைந்தோன் வாழ்க
பருகா வமிர்தெனப் பழமையி னீண்ட
முருகார் முருக மலையினன் வாழ்க
ஆவிதன் பொதினி யாயதென் பழநியின்
மேவிக் கொண்டவெல் வேலினன் வாழ்க
காண்பவ ருள்ளங் கவர்தரு காட்சியின்
மாண்புயர் பழநிமா மலையவன் வாழ்க
ஆவி நன்குடி யமர்ந்துவை யாவிக்
கோவுளங் குளிரக் கொண்டவன் வாழ்க
குமர னகிக் கொங்கலர் பழநியு
ளமரர்க் கமர னனவன் வாழ்க
ஆய்குடிக் கீழ்பா லாமொரு கோட்டிற்
றேய்பவ னென்னத் தோன்றினன் வாழ்க
கருவூர்த் தேவர்தங் கருவே ரழித்த
மருவூர் வெண்ணெய் மலையினன் வாழ்க
பொதியி லிருந்தவன் போற்றருந் தவந்திகழ்
புதியவன் புகழி மலையவன் வாழ்க
ஆன்பொரு னைக்க ணமைமயி லரங்கத்
தேன்பொழி சோலையிற் சேர்ந்தவன் வாழ்க

Koyiloor Digital Library

நாக மலைப்பெயர் நயந்தசெங் கோட்டில்
ஏக னாகிநன் கிருந்தவன் வாழ்க
முருகன் பூண்டியின் முருகன் வாழ்க
திருவளி நாபியிற் சிறந்தவன் வாழ்க
உன்னினா ருன்னியாங் கெய்தவோர் மருந்தாய்ச்
சென்னிமா மலைமேற் றிகழ்பவன் வாழ்க
தென்சே ரிக்கட்டிலைத் தவன் வாழ்க
என்பா னீங்கா திருந்தோன் வாழ்க
வள்ளியங் கொடிபடர் வள்ளிமா மலையில்
வள்ளியோ டமர்ந்தமெய் வள்ளியோன் வாழ்க
கொங்கர்தங் கிணற்றுக் கடவினிற் கோல
மங்கைய ரிருவர் மணாளன் வாழ்க
மருந்தென மருத மலைமேற் குறிஞ்சி
விருந்தென வுறுவார்க் கிருந்தவன் வாழ்க
ஆதியில் விதியை யருஞ்சிறை யிடுவித்
தாதிமலைவாழ் வுகந் தவன் வாழ்க
கொங்கணர் தாழ்தரு கொங்கவிழ் கொங்கக்
கொங்கண மலைமகிழ் கொண்டவன் வாழ்க
சிரவணம் பட்டி சேரிரத் தினமலை
மருவிநம் பத்திமை வளர்த்தவன் வாழ்க
மணிநீர்ப் பவானிக் குமார மலைமேல்
பணிவார்க் கிருந்தருள் பயப்பவன் வாழ்க
கண்ணா ரமுதெனக் காண்டொறுங் களிக்க
அண்ணா மலைக்கு ளமர்ந்தவன் வாழ்க
அயில்வேல் வலனேந் தணிசே வற்கொடி
மயிலம் பெருமாள் மாணடி வாழ்க

Koviloor Digital Library

கயற்கட் கோமகள் காட்டிய போரூர்
வியக்கத் தோன்றிய விசாகன் வாழ்க
எந்திர நீர்க்கல மிலங்குநீள் சென்னைக்
கந்தகோட் டத்தமர் கந்தவேள் வாழ்க
ஆறு காட்டிடை யணிநகர் வேலூர்
ஏறென நிகரின் றிருந்தவன் வாழ்க
சுனைநீர் நீலந் தோய்தரு தணிகை
நினைவா ருள்ளகம் நீங்கான் வாழ்க
நெடியோன் வேங்கடத் துடனுங் கிருந்த
வடிவேற் றொடித்தோள் வானவன் வாழ்க
வடவர்சீ பருப்பதம் வாழ்தரு சித்தர்க்
கிடைமா பெருஞ்சித் தியற்றுவோன் வாழ்க
கச்சியிற் கந்த கோட்டத் திருந்துதன்
மெச்சுறு பழமை விரித்தோன் வாழ்க
குவளைவாய் மூரிடைக் குலையிள நீர்த்தெங்
கிவர்பொழில் எட்டு குடியினன் வாழ்க
மிக்கவர் தமக்கு விழுமிய வருளும்
சிக்கலுட் டிருவுடைத் தேசிகன் வாழ்க
இசையுறு பாடற் கிடைமரு தூரில்
நசையுறு சேந்தனை நயந்தவன் வாழ்க
தண்புள் ளிருக்கு வேளூர்த் தவிசிடை
பண்பும் பயனும் பயந்தோன் வாழ்க
தென்கடம் பன்றுறைத் திறலோன் வாழ்க
என்கடன் பணியென் றேற்றவன் வாழ்க
குடகுநீர்க் காவிரி வடபா லேரகத்
திடையிறைக் கருமறை யிசைத்தோன்வாழ்க

Koviloor Digital Library

குடந்தை நன்னகர்க் கோபுரக் கோயில்
இடந்தொழு மேழையர்க் கிளையன் வாழ்க
தொல்லியம் பாவைதன் கொல்லிக் கிரியினில்
மெல்லியர் தோணலம் விழைந்தோன் வாழ்க
தோகை மலைமேற் றெல்லோன் வாழ்க
ஓகைகொள் பூவா ழூர்க்குயிர் வாழ்க
வண்டிமிர் சோலை வயலூர்க் கோயில்கொண்
டெண்டிசை யேத்தநன் கிருந்தவன் வாழ்க
குழைவளர் விராலிக் குன்றினன் வாழ்க
தழைபுல் வயன்மலைத் தனித்தரு வாழ்க
குணதிசை நோக்கிக் குன்றக் குடிமிசை
மணமிகு திருவளர் மாமலை வாழ்க
அன்பராங் காங்குமெய் யன்பொடு தாழ்தர
வின்புற வாங்காங் கிருந்தவன் வாழ்க
முடிகெழு வேந்தர் மூவர்தம் நாட்டொடும்
குடிகெழு கொங்குநான் கெல்லை யாகத்
தொல்குடி வேளி ராண்டதொன் னாட்டகத்
தொல்காத் தொல்புக ழோங்கிய வீகைத்
துவரா பதியூர்த் துவரா பதிநாட்
டுவராக் கொடுங்குன் றுயரிய மயின்மேற்
பாங்கருஞ் சிறப்பிற் பயின்றெழு கோலந்
தாங்கிய ஒருதனித் தலைவன் வாழ்க
செருக்களம் புகழச் செருப்பல வெடுக்கும்
செருவீ டுடையதொல் சிர்த்துவ ராபதி
வடமருங் குயர்ந்துயர்ந் தோர்திறம் வாய்ந்து
குடகுண திசைநீள் குளிர்தோய் கரந்தை

Koviloor Digital Library

மலைகிழ வோனென நிலைவேள் வாழ்க
ஊர்முந் நூறோ டுயரிய பறம்பும்
பேர்பெறும் பறம்புநா டென்னும் பெயர்த்தாய்
இன்னுந் தோன்றிம் மன்னுநா டுவப்பக்
கபிலர்வாழ்ந் திருந்த கபிலர்தங் குட்டொடு
நவில்பல விருக்கைகொள் அவிர்தரு பாரி
பறம்பினூ லேணி வரம்பினிற் பிழையா
தேறிக் காணினன் கிருந்தோங் ககலிடத்
தூறுநீர் மாறா உண்ணீர்த் தண்சுனை
மருங்குவந் தொளிருமெய் வள்ளல் வாழ்க
பறம்படுத் தொருபாற் டல்வளம் பழுநிய
நிறம்பெறு மைமுகில் நீங்காப் பழமுதிர்
சோலை மலைமிசைத் தோன்றிய வொருவன்
மேலவர் வாழ்த்தி விண்ணெ டுப்ப
ஞாலமே லின்புற நன்குவா ழியவே.

மதுரை மதுரஞ்சுந்தரபாண்டியனார் பாடியருளிய

முருகக்கடவுள்

திருத்தல வாழ்த்துத் திருவகவல்

முற்றும்.

Koviloor Digital Library

உ

முருகவேள் துணை.

முருகக்கடவுள்
திருத்தல வாழ்த்துத் திருவகவல்.
குறிப்புரை.

41-லிருந்து 51-வரை (1) பனியின் மெல்லிய கூவம். (2) பூவின் மெல்லிய கூவம் (3) வைத்திய கூவம் (4) சத்திய கூவம் (5) குண்டுநீர்ச்சுனை (கங்கைத்தீர்த்தம்) இது மலைமேல் தென்மேற்புறத்துச் செங்குத்தானகற்பிளவில் வற்றாது நீரூற்றுக்கொண்டுள்ள சுனை. இதில் வண்ணமமைந்த தேளிமீனென்ற ஒருவகை மீன்கள் இருந்துவருதலை இன்னும் காணலாம். இச் சுனையின் கீழ்ப்பாங்கு குமரக்கடவுள் ஆலயமொன்று அக் காலந்தொட்டுள்ளது. அதில் தேவியர் இருபாலுங் காண ஆறுமுகக்கடவுள் வீற்றிருத்தலையுடையது. (6) கைமாச்சுனை இது மலைமேலிருந்த முருகக்கடவுளுக்கு நீராட்டுதற்குப் புனல்கொண்டுசெல்லும் யானை குளித்தல் முதலியவற்றிற்கு இயைந்த சுனையாம். இதனை யானைச்சுனையென வழங்கிவருவர். இதனைப் பரிபாடலுட் காண்க. (7) கலிமாச்சுனையென்பது குதிரைச்சுனை (8) கடம்புநீர்ச்சுனை இதனையும் பரிபாடலுள் காண்க. (9) சரவணப்பொய்கை ஆக இவ்வொன்பதும் திருப்பரங்குன்றத்தில் பழமைதொட்டுள்ள தீர்த்தங்களாம். இன்னும் பிற தீர்த்தங்களுமுள. அவற்றை அத் தலபுராணத்துட் காண்க.

51. மீனத்தாபதர் என்பது மச்சமுனிவரை; இவர் அத் தலத்தை என்றென்றும் தனதாக் கொண்டுள்ள மூலவர்க்கத்துள் வந்த சித்தராம் என்றறிக. இவர்செய்த சித்தநூல்கள் விளங்கக் கிடப்பன வாதலின் வெளிப்படையாம்.

55. தேவியர் என்றது வள்ளி தெய்வயானையாரை; இதனைப் பாடலுள் பரக்கக் காணலாம்.

57. புசண்டர் பறம்பு; இது திருப்பரங்குன்றத்திற்கு வடகீழ்பால் ஒருபர்லாங்கு தூரத்திலுள்ளது. இப் பறம்பில் அகத்திய தீர்த்த

Koviloor Digital Library

மும் புசுண்டர் சுனையுமுண்டு. இது காக புசுண்டாது ஆச்சிரமம் என்க. அகத்திய தீர்த்தம் தேகாரோக்கியத்திற்குப் பேர்போன தாகும். நீருற்று ஓடிக்கொண்டிருப்பது. தற்போது மொட்டை யாசுத் தீர்த்தம் என வழங்கிவருவர்.

58—60. இது மதுரையிலுள்ள கூடற்குமாரனென்க. இவ் விடம் பொற்றாமரைக்கு மேல்பாலுள்ள கிளிக்கூட்டு மண்டபத் தின் வடமேற்கணுள்ளது. இப் பெயர்கொண்ட மதுரைக்குரிய குமாரக்கடவுளென வழங்கி வருதலையுங் கண்டோர்க. வண்டமிழ்ப் புலவோர்க்கருளினன் என்றது "உலகியனிறுத்தும் பொருள்மா பொடுங்க, மாறனும் புலவருமயங் குறுகாலை,மணிக்காலறிஞர் பெருங் குடித் தோன்றி, இறையோன்பொருட்குப் பாணர்முதற் கேட்பப், பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும், பாய்பாறிய நீயேயாக லின்" என்ற கல்லாடம் முருகக்கடவுள் துதியிற் கூறிய பொருளா மென்பதோர்க.

65—68. தென் திருப்பாலை யூரென்பது, திருப்பாலையூரினை யென்க. இது திருப்பூவணத்திற்குத் தெற்கே 8 மைல் தூரத்துள் ளது. இங்குத் திருப்பாலை யூருடையார் என்று சிவஸ்தலம் பழமை பெற்றுள்ளதாக ஒன்றுள்ளது. இதன் கருப்பக்கிரகத்தினையும் ஏனையகற்பணியையும் ஆக்கியவர் சுந்தரபாண்டியன்என்னும் பாண் டியனென அங்குவரைந்துள்ள கல்வெட்டுச்சாஸனம்விளக்குகிறது. சங்கிலி எழுத்துச் சாஸனமும் வேறு காணப்படுகிறது. இத் தலத் தே தான் 'கோழிமேற் பாடுவதன்றிக் குஞ்சிமேற் பாடுவதில்லை' என்றிருந்த பொய்யாமொழி யென்னும் புலவரை இடைச்சுரத்தே வேடுவனாகத் தோன்றி வழிமறித்து என்பேர் முட்டை யெனக் கூறி "பொன்போலுங் கள்ளி" யென்ற பாடல் பாடச்செய்து அருள்புரிந்த தலமென்றறிக. இங்குள்ள சிவபெருமானுக்குத் திருப் பாலையூருடையநாயனார் எனப்பேராகும். இது இந் நூலாசிரியர்க்கு மரபுவழிவந்து சொந்த உரிமையில் தற்போதும்உள்ள தலமாமென்க.

Koviloor Digital Library

69—70. கல்லுமடையூரென்பது கல்லுமடை என்னும் ஊரி லுள்ள தலத்திலை யென்க. இது திருப்பாலையூர்க்கு மேல்பாங்கு கால் மைல் தூரத்துள்ளது.

71—72. இது மறவர் நாட்டில் உள்ள வீரக்குடியை என்க. இத்தலம் மரத்தடியில் வீற்றிருக்கின்ற திருக்கோலங்கொண்டுள்ள தென்க. இது முடுக்கங்குளம் என்னும் ஊர்க்குக் கிழக்காக ஒன் றரைக் காவத தூரத்துடையது.

73. முடுக்கங்குளத்தூரென்பது, முடுக்கங்குள மென்னும் ஊரின்கணுள்ள சிவாலயத்தோடு அமைந்த தலமென்க. இது கல்லுமடையூர்க்குத் தெற்கண் ஐந்துமைல் தூரத்துள்ளது.

75. கொடுமளூர், இது இராமநாதபுரத்திற்கு மேற்கண் மற வர் நாட்டிலுள்ளது. திருப்பூவணம் முதலாக இதுகாறுமுள்ள தலங் கள் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ளன என்றறிக.

77. கதிர்காமம், இது இலங்கைக்கண்ணுள்ளது. இதன் பக்கத்தே மாணிக்க கங்கை என்ற ஆறு ஒன்று ஓடுகின்றது. சத்தி ரங்கள் மட்டுமுள்ளன. மாணிக்க விநாயகர் என்பதும் ஒன்றுள்ளது. யானைக்காட்டின் இடையேயுள்ள வழியாய்ச்சென்று தரிசித்தற் குரியது. குகைகளுமுள்ளது. இந் நாட்டுள்ள தலத்தில் தலை சிறந்ததாமென்க.

79. திருக்கோணமலை, இதுவும் இலங்கையிலுள்ளது. இதில் பாடல்பெற்ற சிவஸ்தலத்தின் கணுள்ள முருகக்கடவுளைக் குறித்த தாமென்க.

80. அருக்கோணமலை, இதுவும் இலங்கைக்கண் சிவஸ்தலத் துள்ளது.

81—82. அலைவாய் என்பது, திருச்சீரலைவாயை. இது திருச்செந்தூரமென்க. கடற்கரைமேலுள்ள தலம். பாண்டியன்

Koviloon Digital Library

மகளாது குதிரைமுகமாறிய வநஞராம்பரீ என்னும் கடற்றுறைத் தீர்த்தமுடையது.

83. இது திருநெல்வேலிக்குத் தென்கிழக்காக இரண்டு காவதத்துள்ளது. விஷ்ணு ஸ்தலம்.

84. வள்ளியூர், இது நான்குநேரியின் கீழைச்சாலைமார்க்கத்தில் போம் வழிக்கண் உள்ளது. முருகக்கடவுட்குரிய ஒரு ஸ்தலமாமென்க. ஆண்டுதோறும் வள்ளிநாயகியார் திருக்கலியாணம் நடைபெறுவது.

85—86. மயேந்திரமென்பது, மயேந்திரமலையினை. இது பொதியின் மலைக்குத் தென்பாலுள்ளது. இதனைப்பற்றிப் போகர் எழாயிரம் என்னும் பெருநூலின் இரண்டாவது ஆயிரத்தால் நன்கு தெரிந்துகொள்ளலாம். இதனுள் உயரிய நலந்தரும் சுமார் 450 தீர்த்தங்கள் உள்ளன. திருவாசகத்தால் பாராட்டப்பெறும் மலை.

87. மருத்துவாழ்மலை யென்பது, மயேந்திரத்தினை யடுத்து பொதியின் மலைப்பக்கத்துள்ளது.

88. அகத்தீச்சுரம், இது பொதியின் மலையின் தென்மேற்குப் பக்கத்திலுள்ளது, நாஞ்சிநாட்டின்கணுள்ள தலமென்பதையறிக.

89—90. பொதியப்பொருப்பு என்பது, பொதியின் மலையை என்க. இதுகாறும் உள்ள ஸ்தலம் பொதியிலை வலமாகக் கொண்டதும் பொதியிலின்கண்ணுள்ளதாவதுமென்க.

92. குமாரர் கோயிலென்பது, நாஞ்சிநாட்டின்கண்ணுள்ளதும் பொதியிலுக்குச் சற்றுத் தென்மேற்கில் உள்ளதுமாமென்க.

93. அரிப்பாடு, இது கொட்டாரக்கரை ஸ்டேஷனிலிருந்து வடக்கண் சுமார் ஒன்றரைக்காவதத்துள்ளது.

95. திருமலை என்பது பண்பொழிலென்னும் ஊரினைப் பக்கத்தே கொண்டமலை என்க. இது தென்காசிக்கு வடமேற்கண்

Koviloor Digital Library

சுமார் 7 மைல் தூரத்துள்ளது. இம் மலைமேல் ஒரு சுனையுண்டு. அது அக்கடவுட்கு நீராட்டுதலாதியவற்றிற்கு உள்ள தீர்த்தமா மென்க.

96. இலஞ்சி, யென்பது, திருக்குற்றாலத்திற்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்துள்ளது, இலஞ்சி யென்றுமூரையடுத்தது. இத னையும் குமாரர்கோயிலென அங்குள்ளார் வழங்கிவருதலையுங்காண்க.

98—99. சிவமலை யென்பது, சிவசைலம் என்றதனை. இது கருனையாறு தோன்றும் பொதியமலைத் தொடரிலுள்ளது. இதில் பழமையான சிவாலயமும் ஒன்றுண்டு. பொதியின் மலையின் வடக் கண்ணுள்ளது. கண்ணுக்கினிய ஓர் ஏகாந்தமான தலமாம். ஆம் பூர் ஸ்டேஷனில் இறங்கிப்போகக்கூடியது.

100—101. இதிற் குறிப்பிட்டது பொதியின் மலையினின்று திரண்டு ஆர்த்து இறங்கும் கலியாணதீர்த்த அருவியான பொருனை யாற்றின் தலைப்பின்கண் இடபாலுள்ள தலத்தினை. இதனை அகத் திய ஆச்சிரமமென்று வழங்கி வருவர். அகத்திய முனிவரது ஆலய மும் சேர்ந்திருக்கிறது.

102. சிங்கைப்பதி யென்பது சிங்கம்பட்டி என்னுமூரிலுள்ள ஸ்தலத்தினை யென்க. இது பொதியிலின் கீழ்பக்கத்துள்ளது.

103—104. வேணுவனம் என்று புராணங்கூறும் திருநெல் வேலிச் சிவாலயத்தில் தனித்துக் கோயில்கொண்டுள்ள ஆறுமுகப் பெருமானை யென்க.

105. குறுக்குத்துறை, திருநெல்வேலியின் கீழ்பால் பொருனை யாற்றுத்துறைகளுளொன்றாகிய குறுக்குத்துறைக்கண் வீற் றிருக்கும் முருகக்கடவுளை என்க. இது அவ்வாற்றின் நடுவண் கோயில்கொண்டுள்ளதாமென்க. தரிசிக்க மனோரம்மியமான ஆற் றினிடையே யுள்ள தலமென்பது வெளிப்படை.

Koviloor Digital Library

107—108. கழுகுமலை, இது கோயில்பட்டி ஸ்டேஷனி லிருந்து மேற்கண் சாலைமார்க்கத்தில் சுமார் 12 மைல் தூரத்துள் ளது. இதில் மலையினைக் குடைந்தாக்கிய கோயிற்கண் முருகக் கடவுள் வீற்றிருத்தல் காண்க. இவ்வாலயத்தின் மேல்பால் வெண் ணிறம் கலந்த நன்னீர்க் குளமொன்று யாவரும் போற்ற அமைந் துள்ளது.

109. குமராபுரம், குமராபுரம் ஸ்டேஷனில் இறங்கிச் செல்ல வேண்டியது.

111. சிவகிரி, இது ஒரு ஜமீனுக்குத் தலையூரென்க. விருது நகர்—தென்காசி இருப்புப்பாதை மார்க்கத்திலுள்ளது. இவ்வூர் மலைக்கண் முருகக்கடவுள் தனித்த திருக்கோலங்கொண்டுள்ள தலத்தினையாமென்க.

113—114. தேவதானம்என்பது, சேற்றூருக்குத் தென்பால் இரண்டு மைல் தூரத்துள்ளது. தவம்பெற்ற நாயகி என்னும் உமா தேவியாருடன் நச்சாடைலிங்கர் என்னும் இறையனார் அமர்ந்துள்ள ஸ்தலமும் அடுத்து நெருங்கியுள்ளது. இங்கு ஏற்றடி என்னும் அதி சயமான தரிசனம் இக்காலத்து மிக்க வியப்பினைத் தருவதாம். ஏற் றடி யென்பது அத்தல இறையனார் தேவியாருடன் ஏறேறிச் சென்று அன்பர்கட்கருள் புரிந்து திரும்ப வந்திறங்கும்போழ்து அவ் வேற்றின் காற்குளம்படிச்சுவடு தரையுட் பதிதல் என்ற பொருளு டையதாம். தரிசிப்பவர்க்கு அதிசயமளிக்கும் ஒப்பற்ற காட்சியுடை யது. இங்குப் பாண்டியன் அக்காலத்துத் தங்கியிருந்த போழ்து சோழன் இவன்மேற்செற்றங்கொண்டிருப்பது வெளியிற் றோன் ருது கோறல் கருதி வஞ்சகமாக நச்சாடையொன்றனுப்ப அதனை இறைவன்மேல் வைத்த மெய்யன்பால் அவ்விறைவற்குச் சாத்த அஃதெரிந்து சாம்பலாகியது. அதனால் நச்சாடைலிங்கர் எனப் பெயர் வாய்ந்த தலமாம். இத்தலத்தே முருகக்கடவுட்கு ஆண்டு தோறுஞ் சிறப்பான திருவிழா 10 நாள் நடைபெறும். ஜமீன்தாரி நேர்பார்வையில் எல்லாம் நடைபெறுவதாகும்.

Koviloor Digital Library

115 பேறைப்பதி யென்பது, பேறையூர்என்றும் ஸ்தலமாம். இவ்வூர் திருமங்கலம் ஸ்டேஷனிலிறங்கி மேற்கே செல்லும் சாலை மார்க்கத்து ஒன்றரைக்காவதத்து உள்ளது.

117—118. புத்தூர், இது ஸதாசந்தர் என்னும் ஆனந்தவருக்கச் சித்தருள் ஒருவர் வீற்றிருக்கின்ற திடியமலைப்பக்கத்து இரண்டு மைல் தூரத்து உள்ளது. இப்புத்தூர்த் தலத்தை மதுரைத் தலத் திருவுடல் என்று கூறும் திடியம்புத்தூர் என்பது மதுரைத் திருவுடல் வட்டப்பிரதியிலிருந்தும் வழங்கிவருகின்றமையுங் கண்டு கொள்க. திடியமலையின் அடியில் திருமாலுக்கும் சிவபிரானுக்கும் தனித்தனி ஆலயங்கள் உண்டு. புத்தூர் முருகப்பெருமானுக்குக் கார்த்திகைதோறும் திருவிழா உண்டு. இவ்வுத்ஸவம், தற்போது மதுரைக் கோயில் டிரஸ்டியாயுள்ள ஆர். துரைசாமி நாயுடு அவர்களால் உண்டுபண்ணியதாகும். இது திருமங்கலம்ஸ்டேஷனிலிருந்து மேற்கே போகும் ஒரு சாலை மார்க்கத்தில் சுமார் ஒன்றரைக்காவதத்துள்ளது. வாலாந்தூர் ஸ்டேஷனில் இறங்கிப்போயும் தரிசிக்கலாம். வாலாந்தூரிலிருந்து தெற்கே 3 மைலில்உள்ளது.

119. திருமாணிக்கம், திருமங்கலம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே இரண்டு காவதத்திலுள்ளது. இது அழகிய அடக்கமான கோயிலையும் ஒரு நல்ல தீர்த்தத்தினையும் கொண்டிருக்கின்றது. இதனை, உசிலம்பட்டி ஸ்டேஷனிலிறங்கி, தெற்கண் செல்கின்ற சாலைமார்க்கத்து ஒரு காவதத்துள் போய்த்தரிசிக்கலாம்.

121—128. மாவூற்று, ஓரிய ஸ்தலமென்க. இது சங்க நூலான ஐம்பெருங்காப்பியத்துள் தலைமைத்தான சிலப்பதிகாரத்துள் கூறிய முருகக்கடவுளினது பழமையான தலமாமென்க. இதுவைவையாறு தோன்றிவருகின்ற சையமலையின் வடகீழ்பால் யாற்றினணித்தாக உள்ள கடமலைக்குன்றின் மாமர நீழலில் தோன்றிச்செல்லும் மாவூற்றுத் தீர்த்தத்தின் வடபக்கத்திலுள்ள ஸ்தலமாமென்க. இம் மாவூற்று நீர்க்கண் விழும் தழை

Koviloor Digital Library

குழைகள் மணலாதலும் அந்நீரில் எழுந்துள்ள மரத்தின் வேர்கள் கல்லாயிருந்து வருதலும் இன்றுங் காணலாம். இத்தல முருகப் பெருமானை இராக்காலத்து மூன்றும் ஜாமத்திற்குப் பின்னும் அந்திக் காலத்திற்கு முன்னுமாயுள்ள இடைநின்றகாலத்து நீராடி வழிபாடாற்றல் வேண்டும். இரவிற்றங்கலாகாது. சித்தர்கள் வாசமுள்ள இது, கொடியமிருகஸஞ்சாரமுள்ள காடுகொண்டமலையிடையே யுள்ளது. செல்லுபவர் தங்குவதற்கு இட அமைப்புங் கிடையாது. சித்திரை மாதம் தலைநாளன்று ஏராளமாக ஜனங்கள் அவ்வூற்றில் நீராடித் திருவிழா அயர்ந்து வருவர். இவ்விழா ஆண்டுதோறும் நிகழ்ந்து வருவது. இந்த ஜனங்கள் அந் நாளிற் சந்நிதி முன்னின்று தங்குறையினை முருகக்கடவுள் திருமுன்னர்க் கூறி அக்குறையினின்று நீக்கம்பெற்றபொழுது ஒவ்வோராண்டினும் பங்குனித் திங்கள் 22-ஆம் தேதி முதலாக 30 தேதி காறும் ஒருபொழுதுண்டு தரையிலுறங்கி அம் முருகவேட்கு குறைநீக்கக் கடனிறுத்தல் பற்றிக் கட்டளைபெற நோன்புஞற்றி வருவர். அந் நோன்பு நாள்களுள் ஒருநாள் இரவில் கனவிற்றோன்றி இன்னது செய்கவெனக் கட்டளையிடுதலும் இன்றுவரை அன்பினர் யாவருமநுபவித்து வருதல் யாவரும் அறிந்ததேயாம். அக்கட்டளையின்படி அப் பெருவிழா நாளன்று அங்குச் சேர்க்கப்பெறும் சோதனைக் காவடி முதலியன அன்பர்கள் நேரே கண்டறியத்தகுந்த அதிக வியப்பினை உடையதாகும். இத் தலத்தினை மாவூற்று வேலப்பரென வழங்கிவருவார். கடமலைக்குன்றென்னுமூர் சையமலைக்குட் புறத்துள்ளது. இவ் முருகக்கடவுளது தலத்திற்றான் கதிர்வேலஸ்வாமிகள் தாம்பெற்ற பெரும்பேற்றால்அங்கு ஆணைமொழி வைத்துக் கூறியவாறு சென்று வணங்கி வருதலும் தங்குறைதீர்ந்தார் கடன் செலுத்தலும் ஆம் என்பதை அக்கடவுளைப் பூசிப்பார் கூறிவருதலைக் கொண்டும் கேட்டும் அறிக. இச் சுவாமிகள் அக்கடவுளின் பேற்றால் அழியா உடம்பினராய் அறிடங்களில் சமாதிபெற்று உள்ளனவற்றுள் தென்காசி மேலமுத்தாலம்மன்கோவில் தெருவிலுள்ள

Koviloor Digital Library

சைவ வேளாளர் இல்லமுமொன்றும். அங்குசென்று அச்சமாதியினை
நேரேகண்டறியலாம் மாவூற்று எனனும் இத்தலம்ஆண்டிபட்டி என்
னும் ரயில்வேஸ்டேஷனிலிருந்து தெற்காக 10-மைல் சென்று
தெப்பத்துப்பட்டி என்னும் ஊரில் தங்கி அங்கிருந்து மலைமேல்
சென்று போய் தரிசிக்கத்தகுந்ததாகும். இத்தலம் கண்ணகி ஒருதன
யிழந்தாளாய் மதுரையை எரிசெய்தபோது மதுராபதேவி வெளித்
தோன்றிச்சென்றிருக்கச்சொன்னவையையாறுடையசையமலையின்
வடகீழ்த்திசைக்கணுள்ள தலமாம் என்க. சையமலைக்கண் வையை
யாற்றுவழிச் சென்ற கண்ணகி மலைமேற்சென்று மேற்கு வழி
யிறங்கி வேங்கைமரத்திருந்து விண்ணஞ் சென்றமைகண்ட
சேரன்செங்குட்டுவன் அங்கு ஆக்கியகண்ணகி கோட்டமும் பக்கத்
துள்ள அமைப்புகளுங்கண்டுகொள்க. மலையகத்தின்பால் உள்ள தல
மென்க. இச் சையமலைக்கு மேல்பாகத்துள்ள ஊர்கள் சேர
நாட்டினைச் சேர்ந்ததென்பதை ஆங்குள்ளார் இன்றுவரை வழங்கி
வருதலையும் கண்டோர்க. இக்கடமலைக்குன்று என்னும் ஊர்க்கு
வடமேற்காக சையமலைக்குள கோவலன் குளம் என்று ஓர் குளம்
இருந்து வருகிறது. வையையாறு தோன்றுகின்ற சையமலையின்
வடமேற்குத் தலைப்பிலுள்ள உடங்கல் என்னுமிடத்தில் பெண்
ணுருப்பெற்ற ஓர் தெய்வமுமுள்ளது. அதனையறிந்தார் கண்ணகி
அம்மன் எனக் கூறுகின்றனர். அங்குள்ள மலையர்கள் பொம்மக்காள்
என ஓர் பெயரினைச் சொல்லுகிறார்கள். இம் மலையின் மேற்குச்
சரிவினை எல்லையாக்கொண்டது சேரநாடா மென்க.இப்பொழுதும்
அங்குள்ளார் சேரனை வாழ்த்தியே விதைவிதைத்தல் முதலியன
செய்து வருகிறார்கள். இது 'மேற்குப் பெருவெளியாம்' என்ற பெரு
வெளியென்னும் இடத்தை வடமேற்காகக்கொண்டுள்ளதும் என்ற
தையும் நன்கறிக. பாண்டி நாட்டின் மேற்கெல்லைப்பக்கத்துள்ள
சேரன்பாற் பட்டுள்ள இடத்து இருந்துவரும் கண்ணகிகோட்டம்
என்பதையுங் கண்டுதெளிக.

Koviloor Digital Library

129—132. சுருளிமலை, இம்மலையின்கண் மரம் கல்லுருப் பெற்றதைப் போன்றதாய் அடியினின்று தோன்றிச்சென்று மேலே விரிந்து கவிழ்ந்து நிழல்தர நின்றுள்ளது. இதனடியில் முருகக்கடவுள் கோயில்கொண்டிருத்தல் காணத்தகுந்தது. இக் கல் மரக்கிளையின் கணுக்கள்தோறும் ஊசிநுனியளவுத் துளை கொண்டு அத்துளைநின்று ஓயாது நீர் இறங்கி முத்தம்போல் தொங்கிநின்று உதிரும் நீர்முத்தத்தால் பெருமான் திருமேனி நனையப்பெறுவது. இது சுருளிமலைமேலிருந்து கீழிறங்கிச் செல்லும் சுருளியாற்றின் கீழ்பாங்கில் சுமார் ஒன்றரைமைல் நடையிலே மலைமேலுள்ள தலமென்க. இது சையமலையின் வடமேற்கணுள்ளது. இதற்குப்போகத் தேனி ஸ்டேஷனிலிறங்கி உத்தம பாளையம் கிளைவழியிற் சென்று சுருளிப்பட்டியில் தங்கவேண்டும். அங்கிருந்துச் சென்று மலையில் தரிசிக்கவேண்டிய தலமாமென்க. இம் மலையினைச் சித்தர்கள் வாசஸ்தலமுள்ள மலையென வழங்கிவருதல் வெளிப்படை. இம் மலைமேற் செல்லச்செல்லப் பல விடங்களில் சிவலிங்கங்களும் அரிய காட்சியும் அன்பர்கள் காணத்தகுவதாம்.

133—135. அரிகேசரிநல்லூர் என்பது அரிகேசரி என்று திருவாசகத்தில் காட்டிய 'கலைவளர் அரிகேசரியாய் போற்றி' என்ற தலமாம் என்க. இதனை இப்பொழுது சின்னமனூர் என்று வழங்கிவருவர். இத்தலம் அளநாடு என்னும் பகுதியினை அக் காலத்துச் சார்ந்துள்ளதாம். இத்தலத்தில் சிவபிரான் வலத்தும் தேவியார் இடத்தும் முருகக்கடவுள் நடுக்கண்ணும் தனித்தனியாக அமைந்துள்ள கோயில்களைக்கொண்ட ஒரு கல்மதிற்சுற்றுள் அடங்கிய தலமாமென்க. இத்தலத்துச் சிவாலயக் கருப்பக் கிரகத்துள் அளநாட்டு அரிகேசரிநல்லூர் எனப் பல இடங்களிலும் சிலா சாஸனத்துள் காணப்படுதலைக்கொண்டு நன்கறிந்துகொள்ளலாம். இத்தலம் தேனி ஸ்டேஷனிலிறங்கி தெற்கே செல்லும் சாலை

Koviloor Digital Library

மார்க்கத்திலுள்ள சின்னமனூர்க்கு மேற்கே மூன்று பர்லாங்கு தூரத்துள்ளது.

136—137. தேனித்தென்பால் வீழ்நீரின்பினன் வாழ்க என்றது நீர்த்தத்தொட்டில் முருகக்கடவுளை என்க. இது தேனி ஸ்டேஷனிலிறங்கி மேற்கண் போடிநாயக்கனூர்க்குச் செல்லும் சாலை மார்க்கத்தையொட்டி வடக்கண் தேனியாற்றின் தென்கரையில் நீர்வீழ்ச்சியுள்ள தொட்டிலை இடமாகக்கொண்ட தலம். இது தேனிக்கு நாலுமைல் தூரத்திலுள்ளது. இத்தலத்தினைத் தீர்த்தத் தொட்டியெனக் கூறுவர்.

138—139. நாகமாமலை, மதுரைக்கு மேற்கண் அரைக்காவதத்திருந்து நீளமாக மேற்கே செல்வதாயுள்ள நாகமலையை என்க. மதுரைக்குச் சுமார் 9 மைல் தூரத்தில் மலைக்கணிருந்துவீழும் நாக தீர்த்தத்தின் பக்கத்தேயுள்ள பழமையான கற்கோயிற்கண் மயிற்பிடர்க்கண் ஒருகால்வைத் தேறி, வேகத்திற் செல்லும் இளம்பருவக் கோலமுடைய முருகவேள் தலங்கொண்டுள்ளது. புல்லூற்று, கல்லூற்று, கலுழநீர்த்தம் முதலிய நீரோட்டங்களுடையதும், பல நீர்நிலைகளையும பெரிய பல குகைகளையும் உடைய சித்தர் சாந்நித்யமுள்ளதுமான இம்மலை மதுரைவாசிகளாலும், பிறவோராலும் பெரிதும் பாராட்டுவதான புனிதப்பிரதேசமாகும். அகத்தியர் பூரண சூத்திரம் 216, என்னும் சித்தர் நூலால் இதன் பெருமையை ஒருவாறறிந்துகொள்ளலாகும்.

140—141. உயர்வான் சுவர்க்கம் என்றது சுவர்க்கத்து மலையை. இம்மலை பெரியகுளம் தேனிக்கிடையே சாலை மார்க்கத்துக்கு மேற்கே சுமார் 4 மைல் தூரத்துள்ளது. இம் மலையின் கீழ்பாற் சரிவில் சுமார் 80 அடி உயரத்தில் சதுக்கமான ஒரே கல்லாக நிற்கும் கோலமே முருகக்கடவுள் திருக்கோலமாயுள்ளதென ஆண்டுள்ளார் வணங்கிக் காவடி முதலிய செலுத்திவருகின்றார்கள். சித்திரைமாதமுதல்நாளன்றுச் சிறப்புவிழா எடுப்பார்கள். பக்கத்தில் வாட்டாறு என்று ஓராறு ஓடுகின்றது.

Koviloor Digital Library

142—143. அகமலை, இது நீர்த்தத்தொட்டிற்கு வடபாலுள்ள ஏழு மலையடுக்கங்கட் கிடையே யுள்ள அகமலையை என்க. இது பெரியகுளத்திற்கு மேற்கண் அரைக்காவதத்துள்ளது. பன்றிமலைக்குத் தென்பாலுள்ளது. இம் மலைக்கண் உள்ள முருகக் கடவுளை அங்குள்ள மலையர்கள் பூசித்து வணங்கிவருகின்றனர். இது சித்துமகிமை அதிகமாயுள்ள சித்தர்கள் வாசஸ்தானமான மலை. இம் மலைப்பாங்கரில் பகலிலும் இரவிலும் எவருஞ் செல்லுதற் கஞ்சுவார்கள்.

144—145. திருக்குளந்தை யென்பது பெரியகுளம் என்னும் நகராம் என்க. இந்நகர்க்கு மேற்கண் அரைமைல் தூரத்தில் வராக நதிக்கரையில் உள்ள தலமாம். இத்தலத்தின் கருப்பக்கிரகத்தினை ஆக்கியோன் சுந்தரபாண்டியனென அத்தலச் சிலாசாஸனத்தி லிருந்து அறியக்கிடக்கின்றது. முன்மண்டபம் சொக்கநாத நாயக்கரென்னும் மதுரையையாண்ட நாயக்க அரசரொருவரால் முருகக்கடவுளின் அன்பரான ஒரு பெரியாரின் கட்டளைப்படி ஆக்குவித்ததையும் அங்குள்ள சின்னங்களால் அறியலாம். இரா ஜேந்திரச் சோழனால் ஆக்குவித்த திருப்பணியும், அவ்வரசன் பேர் கொண்ட சோழீச்சுவர சிவாலயமும் பக்கத்தமைந்துள்ளது. இதற்குத் திருமலைநாயக்க மன்னரால் சந்நிதிமுன்பு ஆக்குவித்த இராயகோபுரமும் ஒன்றுண்டு.

இத்தல முருகக்கடவுள்பேரில் இந்நூலாசிரியர் 'முருகக் கடவுள் திருவருண்மாலை' என்ற பிரபந்தம் பாடியருளியுள்ளார். உருக்கமான நூறுபாடல்களுடையது காண்க.

146. பெரியூரென்பது, பன்றிமலைமேல் மேற்கண்ணுள்ள ஊரென்க, இது பெரியகுளத்திற்கு மேற்கே சுமார் 8 மைலிலுள்ளது. இவ்வூர் மலைக்கண்ணுள்ள முருகக்கடவுளை அங்குள்ள மலையர்கள் பூஜித்து வழிபாடாற்றி வருகின்றனர். மலையர்கள் தாம் பூஜகர்கள்.

Koviloor Digital Library

147. பூம்பாறை இது பன்றிமலையில் உன்னதமான இடத்தில் உள்ளது. கோடைக்கானல் என்னும் அம்மலையிலுள்ள நகர்க்கு மேற்கே பன்னிரண்டு மைல் தூரத்துள்ளது. பனி நீங்காத இடத்து இருக்கின்றது. ஒரு சிறந்த பழைய ஆலயமும் தீர்த்தமுமுள்ளது சுனையுமொன்றுண்டு.மலையர்களால் பூஜித்துவரும் ஸ்தலத்தில் இதுவுமொன்றென்க. இப்பொழுது இடையிடையே நாட்டின்கண் உள்ள பிராமணர்களில் ஒருவரிருவரைக் கொணர்ந்தும் காலவழக்குக்கேற்ப பூஜிக்கச்செய்தும் வருகிறார்கள். கடற்கரை மட்டத்திலிருந்து 6200 அடி உயரத்துள்ளது. பக்கத்தில் கோதுமை விளைகின்றது.

148—149. வில்லுப்பட்டி, இது கொடைக்கானல் பக்கத்தே இரண்டு மைல் தூரத்திலுள்ள முருகக்கடவுள் ஸ்தலமென்க. இதுவும் பன்றிமலையின் உன்னதமான இடத்திலுள்ள ஸ்தலங்களில் ஒன்று.

150—151. முருகமலை, இது பன்றிமலையின்தென்பக்கத்தே பெரிகுளத்துக்குக் கீழ்பால் 5மைல் தூரத்திலுள்ள ஓர் மலையென்க. இம் மலைமேல் முருகக்கடவுள் கோயில்கொண்டுள்ள பழமையான ஸ்தலமொன்றுள்ளது. இதனால் இம்மலை இப்பெயர் வாய்ந்து வழங்கிவருகின்றது. இம்மலைப்பாங்கில் மிருகஸஞ்சாரம் உண்டு. இது ஓர் அரிய ஸ்தலமாகும்.

152—153. பொதினி அல்லது தென்பழநி இது பழநிமலைக்குத் தென்பாலதாகவும் பன்றிமலைச்சாரலின் வடபாலதாகவும் இடைக்கட் பொலிவுற்றிருந்த வையாவிக்கோ என்னும் புகழ்வாய்ந்த முருகக்கடவுளின் அன்பரான வேள் ஆவியின் பொதினி நகரைச் சார்ந்துள்ள தலமென்க. இதனைத் தென்பழநிஎன்று இன்றும்வழங்கி வருவர். இந்நகரழிவுற்றுள்ள பழய சின்னம் இன்றும் ஆங்கிருந்து வருதலைக்கண்டு அவ்வுண்மை யறியலாம். இப்பொதினியையும் பொதினியை ஆண்ட வையாவிக்கோ என்ற வேள்ஆவியையும் புற

Koviloor Digital Library

A. No. Δ2,11(தொ) நூலகம், கோவிலூர்

நாலூறென்னும் சங்கநூல் கூறியிருத்தலையும் ... நூலாசிரியர் முருகக்கடவுள் வழிபாட்டில் ஆர்வங்கொண்டவரா தலின் வேள்ஆவி, மெய்யன்பரெனக்கொண்ட தனிபால் அவரிருந்த பொதினியாகிய தென்பழநியையும் முருகக்கடவுள் தலமாக உட் கொண்டு வழிபட்டுள்ளார் போலும்.

154—155. பழநிமலை இது வெளிப்படை. இம் மலைக்கண் ஏறிச்செல்லும் இடைநெறிக்கண்ணே வையாவிக்கோ என்னும் கல்லாற் சமைக்கப்பெற்ற திருவுருவும் ஒன்று உள்ளது. அதற்கும் ஒரு சிறு ஆலயம் எடுப்பித்திருக்கின்றது. இவ்வேளாவிக்கு அநுக் கிரகித்த முருகக்கடவுள் தண்டபாணியெனப் பாராட்டும் திருக் கோலமுடையவராய்ப் பழநியாண்டவர் என்னும் திருநாமமுற மலைத் தலை வீற்றிருத்தலானும் பொதினிப் பேரூரின் வடபால்மலையா யிருத்தலானும் அவ்வூர்ப் பெயர்கொண்டு பொதினிமலையெனக் கூற நின்று பழநிமலையென வழங்கியதற்கேற்பப் புராண வழக்குக் கொண்டிருத்தலையும் காண்க.

பொதினியைத் தவிர பூம்புரை என்னும் பன்றிமலைக்கு மேலுள்ள பூம்பாரையின் பக்கத்தே திருமாலின் கோயிலொன் றுள்ளது. அவ்விடத்து இராஜதானி என்று வழங்கப்படும் இட மொன்றுகுறிக்கப்பட்டுவழங்கிவருகின்றது. அதனை வையாவிக்கோப் பெரும்பேகனது நகரமாகிய பொதினியென்று ஐயுறுதலும்கூடும். இராஜதானியென்பது வடமொழிப் பெயராகலால் பிற்காலத்து ஆண்ட குறுநிலமன்னர் ஒருவர்க்கு அது தலை நகராயிருந்ததென் பதும் ஆராயவேண்டிக்கிடக்கிறது. ஆதலால் பொதினியென்பது மேற்கூறிய பன்றிமலை வடபாற் சாரலிலுள்ள இடமென்பதைக் கவனிப்பில் வைத்துக்கோடலே தகுதியதாகும்.

156—157. ஆவினன்குடி என்பது, திருவாவினன்குடியினை. இது பழநிமலையினைத் தென்பாலாகக்கொண்ட வையாவிபுரிக்குளத்

Koviloor Digital Library

தின் கீழ்பாங்குள்ள மூன்றாவது படைவீடெனக் கூறும் உயரிய தலமாமென்க. இதனைத் திருமுருகாற்றுப்படையுள் ஆவினன்குடியெனக் கூறியுள்ளமையான் வேள் ஆவியின் நன்குடியில் முருகக்கடவுள் கோயில்கொண்டிருந்த அருளியமையை நன்கு விளக்கும் என்பதுமாம். வையாவிபுரிக்குளத்தினை வைகாபுரிக்குளமென்றும் பழநிமலையிலுள்ள வையாவிக்கோ என்பவரை வைகாபுரியோனென்றும், பொதினியைப் பழநி என வழங்குதல்போல வழங்கிப்போதலும் காணக்கிடக்கின்றது.

158—59. பழநி இது இப்பொழுது இலங்குறும் பழநி நகராம் என்க. இந்நகர்க்கண் கோயில்கொண்டுள்ள குமாரப்பெருமானை யென்றறிக.

160—161. ஆய்க்குடி அல்லது (ஆயக்குடி) கீழ்பாலுள்ள மலையென்பது குழந்தைவேலப்பர்மலை எனக் கூறும் தலத்தினை என்க. இது பழநிக்குக் கீழ்பால் ஒரு காவதத்திலுள்ளது. சத்திரப்பட்டி ஸ்டேஷன் மார்க்கம்.

162—163. வெண்ணெய்மலை இது கருவூர்க்கு வடபால் மூன்று மைல் தூரத்து உள்ளது. கருவூர்த்தேவர் பூஜித்து வரம் பெற்ற தலமென்க.

164—165. புகழிமலை என்பது புகழூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்காக அரைக்காவதத்துள்ளது. அகத்தியர் வரம்பெற்ற தலமென்க.

166—167. மயிலரங்கம். இதனை மைல்ரங்கமென இக்காலத்து வழங்கிவருவர். இது ஆன்பொருனை ஆற்றுத்துருத்திக்கண் இருந்து வரும் தலமென்க. தாராபுரம் கரூருக்கிடையில் சாலைமார்க்கத்துத் தலையூருக்குப் பக்கத்தே யுள்ளது.

168—169. செங்கோடு என்பது திருச்செங்கோட்டினை என்க. இதனை நாகமலை எனக் கூறியிருத்தலைத் தலபுராணத்தா

Koviloor Digital Library

லறிக. இது சங்கரிதுர்க்கம் என்னும் ஸ்டேஷனிலிருந்து சாலை மார்க்கமாக வடமேற்கண் சுமார் 7 மைல் தூரத்திலுள்ளது. இதனை கொடிமாடச்செங்குன்றூர் எனவும் கூறுப.

170. முருகன் பூண்டி யென்பது திருமுருகன் பூண்டி என்னும் தலத்தினை என்க.

171. திருவவிநாசி வெளிப்படை.

172—173. சென்னிமலை இது கொங்குநாட்டின் பிரசித்த மான ஸ்தலம். மலைமேல் கோயில்கொண்டுள்ள தலமென்க.

174. தென்சேரி இதனைச் செஞ்சேரி என்றும் வழங்குவர். இம்மூன்றும் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ளன.

176—177. வள்ளி மாமலை என்றது வள்ளி மலையினை, இத் தலத்தின்கண் வள்ளிநாயகியாரை முருகக்கடவுள் மகிழ்ந்துகொண்ட தலமென அருணகிரிநாதர் திருப்புகழில் நன்குவிளங்க எடுத்துக் காட்டியருளியதை நன்கு ஓர்க. இது கொங்கு நாட்டிலுள்ளது.

178—179. கிணற்றுக்கடவு இது பொள்ளாச்சி போத்தனூர் மார்க்கத்திற்கிடையேயுள்ள ஸ்டேஷன்.

180—181. மருதமலை இது கோயமுத்தூர்க்கு அரைக்காவதத் துள்ளது.

182—183. ஊதிமலை கோயமுத்தூர்க்கு வடக்கே சத்திய மங்கலம் போகும் சாலை மார்க்கத்தின் கிளைச்சாலை மார்க்கத் துள்ளது. இதனைப் பிரமாவைச் சிறையிட்ட தலமெனக் கூறப் படுகிறது.

184—185. கொங்கணமலை இது கொங்கு நாட்டிலுள்ளது. கொங்கண சித்தர் வரம்பெற்ற தலமென்க. இது கொங்கு நாட்டி லுள்ள வாரக்காநாடு என்னும் உள்நாட்டிலுள்ளது. இதனை வேலாயுத

Koviloor Digital Library

ஸ்வாமி மலை எனவும் வழங்கி வருவர். வஞ்சிப்பாளையம் ஸ்டேஷனி லிருந்து தென்மேற்கே 2 மைல் தூரத்திலுள்ளது. நொய்யலாற்றின் பக்கத்துள்ளது.

186—187. இரத்தினகிரி என்பது முருகக்கடவுள் கோயில் கொண்டமலையாகும். இதன் பக்கத்துள்ள சிரவணப்பட்டி என் னும் ஊரினர்க்கு உரிமையுள்ளதும் யாவர்க்கும் பொதுவாயுள்ளது மாம். கோயமுத்தூருக்கு வடக்கண் எழுமைல் தூரத்துள்ளது. சாலைமார்க்கம்.

188—189. குமாரமலை என்பது, சத்தியமங்கலத்துக்குக் கிழக்காக இரண்டுமைல் தூரத்தில் பவானியாற்றின் வடகரையிலுள் ளது. மணிநீர்ப்பவானி என்றது பவானியாற்று நீர் கார்நிறமுள்ள தாமென்பதைக் காட்டுதல்கொண்டுள்ளதென்க.

190—191. அண்ணாமலைக்குளமர்ந்தவன் என்றது, அருண கிரிநாதர்க்குத் திருவண்ணாமலைக்கோபுரத்திருந்து அருள்புரிந்த முருகக்கடவுளையாம் என்க.

192—193. மயிலம் பெருமான் என்றது, மயிலம் என்னும் பதியிலுள் உள்ள குன்றத்தில் உள்ள முருகக்கடவுளை. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன்.

194—195. போரூர் என்றது திருப்போரூராம். இது சிதம் பர சுவாமிகட்கு மதுரைக்கண் உள்ள அங்கயற்கணம்மை அருள் புரிந்தும் இடங்கோலியும் கொடுத்து அதனால் யாவருங்கண்டுய்யத் தோன்றிய முருகப்பெருமானது தலம் என்க. மேற்கண்டசுவாமி கள் இப்பெருமானை திருப்போரூர்ச் சந்நிதிமுறை என்னும் மெய் யன்புகொண்ட பாடல்களால் இயற்றியருளிய நூலினைக் கொண்டுள்ள தலமென்க. இதற்குச் சென்னையிலிருந்து காலின் வழியாகவும் செக்கல்பட்டு ஸ்டேஷனிலிறங்கித் திருக்கழுக்குன்ற மார்க்கமாகவும் செல்லலாம்.

Koviloor Digital Library

196—197. கந்தகோட்டம் என்றது சென்னையிலுள்ள கந்தசாமி கோயிலினை என்றறிக.

198—199. வேலூர். வேலூர்நகர்க்கணுள்ள ஆலயத்து முருகக்கடவுளை. இது வடஆற்காடு ஜில்வாவிலுள்ளது. ஆறுகாடு என்பது ஆற்காடாகி தென்ஆற்காடு வடஆற்காடு ஜில்லா என வழங்குதல் காண்க.

200-201. தணிகைஎன்பது திருத்தணிகையாம்."சுனைநீர் நீலந்தோய்தரு தணிகை" என்றது திருத்தணிகைமலைமேலுள்ள சுனைக்கண் நீலமலர்தோன்றுதலின்பெருமையை எடுத்துக்காட்டியதாமென்க. இதனைத் திருத்தணிகைத் தலபுராணத்தாலறியலாகும்.

202—203. வேங்கடம் என்றது திருவேங்கடமெனத் தமிழ்மொழிக்கு வடஎல்லையாகக் கூறும் திருப்பதி மலையினை என்க. நெடியோன் வேங்கடமென்றது திருமாலுக்கினிமையான திருவேங்கடமாம். "நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும்" என்பதாலும் தொல்காப்பியப்பாயிர விருத்தியுரையாலும் அறிக. இங்குச் சரவணதீர்த்தம் என ஒன்றும் உளது.

204—205. சீபருப்பதம் என்றது மல்லிகார்ஜுன மலையினை. வடவர் சீபருப்பதம் என்றது தமிழெல்லைக்கு வடக்கணுள்ள தெலுங்கர் நாட்டிலுள்ளமையாலென்க. தெலுங்கரை வடவரென்றது 'வடவர்தந்த வான்கேழ்வட்டம், தென்மலைப்பிறந்த சாந்தொடு மறுக' என்ற பத்துப் பாட்டாலுமறிக. அல்லமர், கோரக்கர் முதலிய பெரியார் ஆங்கிருந்த வரலாற்றினைப் பிரபுலிங்க லீலையாலும் சித்தர்கள் சானித்திய முள்ளதென்பதைச் சித்துநூல்களாலும் கண்டறிக. இது கர்நூல் ஜில்லாவில் உள்ளது.

206—207. கச்சியிற்கந்தகோட்டம் என்றது. காஞ்சீபுரத்துள்ள குமரக்கோட்டத்தினை என்க. "மெச்சுறு பழமைவிரித்

Koviloor Digital Library

தோன்" என்பது, கந்தபுராணத்தினைக் கச்சியப்பசிவாச்சாரியார் இயற்றுதற்கு அருட்துணையாய் நின்று அருள்புரிந்தவன் என்பதாம்.

208--209. எட்டுகுடி, இது முருகக்கடவுளின் ஓர் சிறந்த ஸ்தலமாம். இவ்வூரும் ஸ்தலமும் தென்னந்தோப்புக்களால் அடர்ந்து சூழ்ந்து குளிர்ந்த காட்சிப் பொலிவுறவிருத்தலை 'குலையிளநீர்த் தெங்கிவர் பொழில் எட்டுகுடி' என்று எடுத்தாண்டார். குவளைவாய் மூரிடை என்றது. மேற்கே திருக்குவளை என்னும் சிவஸ்தலத்தினையும் கிழக்கே திருவாய்மூர் என்னும் சிவஸ்தலத்தினையும் கொண்டு அவ்விரண்டினிடையே காணப்பெறுவதாம் எட்டுகுடியினையென்றறிக. இது திருநெல்லிக்கா ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மூன்று மைல் தூரத்துள்ளது.

210—211. சிக்கல் இதனைத் திருச்சிக்கல் எனத்தேவாரத்தில் கூறுவர். இதன்கண்உள்ள முருகக்கடவுளை, சிங்காரவடிவேலரெனக் கூறுவர். இது தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஸ்தலமாம். திருவாரூர் இருப்புப்பாதை மார்க்கம் நாகைக்கு 3வது மைலில் உள்ள ஸ்டேஷன்.

212—213. இடைமருதூர் என்னுந்தலத்தினைப் பன்னிரு திருமுறையுள் ஒன்றாகிய திருவிசைப்பாவிலே சேந்தனார் பாடியருளிய இசைப்பாடற் பதிகங்கொண்டருளிய முருகக்கடவுள் கோயில் கொண்டருளிய தலமாமென்க. இது திருவிடைமருதூர் என்னும் சோணாட்டு ஸ்தலமாமென்க.

214—215. புள்ளிருக்குவேளூர் என்பது வைத்தீச்சுவரன் கோயிலாம் என்றோர்க.

216. தென்கடம்பந்துறை, சோழநாட்டிலுள்ள தலமாம் என்க.

Koviloor Digital Library

218—219. ஏரகம் என்பது, திருவேரகத்தினை. சுவாமிமலை எனவும் கூறுவர். சுவாமிநாதன் என முருகக்கடவுளைத் திருப்பெயரிட்டுக் கூறிவருவர். வெளிப்படை.

220—221. குடந்தை என்றது கும்பகோணத்தினை. இதனுள் முருகக்கடவுட்குத் தனித்த பெரிய ஆலயமொன்றுள்ளது. இக் கோயிலை ஏழைச் சுவாமிநாதர் கோயில் என வழங்கி வருவர்.

222—223. கொல்லிக்கிரி என்பது கொல்லிமலை. கொல்லியம்பாவை என்ற அணங்கு வீற்றிருக்கும் மலை எனப் புகழ்வாய்ந்த கொல்லிப்பாவை உள்ள மலையாமென்க. இதனைப் பலநூல்களிலும் கண்டறியலாம்.

224. தோகைமலை, இது திருச்சி ஜில்லாவில் உள்ளது.

225. பூவாளூர், இதுவும் திருச்சிஜில்லாவில் உள்ளது.

226—227. வயலூர், திருச்சிக்குக் கிழக்கே ஆறுமைல் தூரத்தில் உளளது.

228. விராலிக்குன்று என்றது விராலிமலையினை. இது விராலித் தழைகொண்டு நின்ற நிலத்தொடுகிடந்தமையால் "குழைவளர் விராலிக் குன்றினன்" என்றனர் என்க.

229. 'புல்வயன் மலைத்தனித்தரு' என்றது, புல்வயல் என்ற ஊரினைச்சேர்ந்த மலைக்கண்ணுள்ள "குமரேசர்" என்னும் முருகக் கடவுளை. இத்தலத்திலுள்ள பெருமானை முன்னிலையாய் வைத்துக் கூறிய குமரேசசதகமென்பது வெளிப்படையாம் என்பதறிக. இது மணற்பாறை ஸ்டேஷனிலிறங்கி கிழக்காகச் செல்லும் சாலைமார்க்கத்திலுள்ள குடுமியான் மலைக்குக் கிழக்கே சுமார் நான்கு மைல் தூரத்துள்ளது. இது தொண்டமான் புதுக்கோட்டையைச் சேர்ந்தது.

Koviloor Digital Library

230—231. குன்றுக்குடி, இதனை மயூரகிரியென்றுங் கூறுவர். நகரத்தார் நாட்டின்கணுள்ளது. திருவண்ணாமலையாதீனமென்ற குன்றக்குடி மடாதிபத்தியத்திலுள்ள ஸ்தலமாம். முருகக்கடவுள் மலைமேலுள்ள காட்சி காணத்தகுந்தது.

234—241. 'முடிகெழுவேந்தர் மூவர்தம் நாட்டொடும், குடிகெழுகொங்கு நான்கெல்லையாகத், தொல்குடிவேளிராண்ட தொன்றூட்டகத்து' என்றது, கொங்க சேர சோழ பாண்டிய நாட்டினை நான்கெல்லையாகக்கொண்டு அவ்வெல்லையிடைக்கிடந்த தமிழுலகத்தின் பழங்குடிமக்களான வேளிராண்டுவந்த பழயநாட்டின்கண் என்பதாம். 'ஒல்காத தொல்புகழோங்கியவிகைத், துவராபதியூர்த் துவாரபதிநாட், டுவராக் கொடுங்குன் றுயரியமயின்மேற், பாங்கரும் சிறப்பிற்பயின்றெழு கோலந், தாங்கிய ஒருதனித்தலைவன்' என்றது, அழியாப் பழமைமிக்க புகழான் உயர்ந்த வள்ளன்மைமிக்கவேளிர் அரசர் வழிமுறையாய் இருந்தரசாண்ட துவராபதியென்னும் பேரூரினைத் தலைநகராகக்கொண்டு அப்புகழ் மலிந்துள்ளதான பெயர் படைத்த துவாரபதி நாட்டிலேயுள்ள கொடுங்குன்றாகிய பிரான்மலை எனவழங்கும் மலைத்தலத்தினைக் கோயிலாக்கொண்டு மயின்மேலேறி மயிற்பிடர்நோக்கிய கோலங்கொண்டு எழுந்துள்ள முருகக் கடவுளினை யென்க. இத்தலத்துள்ள மயிலும் திருக்கோலமும் உயர்ந்த ஆகிருதியுள்ளது.

242—246. காந்தைமலை, இது செருக்களத்து நண்ணரை வெல்லும் ஆற்றல் படைத்த வலிமிக்க படையினை மாறாது எப்பொழுதும் பெற்றதாகிக் குன்றமுதலிய அரணையுடைய செறவீடு கொண்ட பழமைநீண்டபுகழையுடைய (செறவீடு) துவாரபதியூர்க்கு வடக்கில் உயர்வுடையதாய் ஆன்றோர் இன்றமுள்ள மலையென அன்பும் அச்சமும் கொண்டு யாவரும் போற்றி வருகின்ற பெருமை பெற்றதான கிழமேலாக நீண்டு குளிர்மையுற யிருக்கும் காந்தை மலைக்கண்ணுள்ள முருகக்கடவுளை என்க.

Koviloor Digital Library

செறுவிடு நுவாராவதி யென்ற பேரோடிருந்து வருகின்ற ணமையை இன்றைக்குங் காணலாம்.

247—255. பறம்புமலை, முன்னூறூரும் பறம்பும்கொண்ட நாட்டிற்குப் பறம்புநாடெனப் பெயராகும். சங்கப்புலவர்களும் பறம்புநாடெனவே நூலுட் கூறியுமுள்ளார்கள். இற்றைநாள் வரை யும் அப்பெயரே வழங்கி வருகின்றமையும் வெளிப்படை. அந்நா டாண்ட பாரி, தனது முந்நூறூரினையும் கூத்தர்க்கும் பாணர்க்கும் வரையாது கொடுத்த வள்ளலென யாவருமறிவர்—“கொடுக்கிலா தானைப் பாரியே என்று கூறினுங் கொடுப்பாரிலை” என்று தேவா ரத்தினும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய இப் பாரி, அந்நாட்டின் மிஞ்சிய பறம்பொன்றினையே தன திடமாக்கொண்டு அதன்கண்ணிருந்தனனென்பதும் அதனுனே மற்ற மலைகளினும் புகழால் மிகப்பெருமை வாய்ந்துள்ளதென்பதும் சங்க நூலால் நன்கறியலாம். அதில் பாரியினது உயிர்த்தோழரான சங்கத்தில் தலைசிறந்த கபிலர் என்னும் புலவர் இருந்துள்ள ‘கபிலர் குட்டு’ என்னும் ஓர் இருக்கையும் சின்னப்பலாக்குட்டு, பெரிய பலாக்குட்டு என்னும் குட்டு என்ற பெயர்கள் பல உடையனவான இடங்களும் பெயரமைவோடுள்ளன. நூலேணியிற் செல்லத்தகுவ தான செங்குத்தான மலைமேல் ஏறினுல் ஆங்கு வற்றாத குளிர்ந்த நீரினையுடைய புகழ்வாய்ந்த அகன்றசுனையொன்றும் சிறிய சுனைகள் பலவுமாக இருத்தலையுடைய அச்சுனைகளின் மேல்பக்கத்தே கிழக்கு நோக்கி விளங்குவதான முருகக்கடவுளை ஈண்டுக்கூறிய தென்க.— மெய்வள்ளல் வாழ்க, என்றது புகழமைந்த பாரியாகிய வள்ளல் மறைந்து போயினும் அவற் காங்கிருந்து அருள் சுரந்து புகழினைக் கடந்து முக்காலத்தும் அன்பினர்க்கு நினைத்தபடி அருள்கொண்டு வழங்கி வருதலான் ‘மெய்வள்ளல்’என்றார்—வனெனின் வள்ளலாகிய பாரி வேளாதலின் அவ்வேள் பாரி வணங்கிவருந்தெய்வம் செவ்வே ளென்னும் மெய்வள்ளல் எனக்காட்டியமை கவனித்தற்பாலது என்க.

Kovileon Digital Library

நாலெளியில் எறிக்காண்பார்க்கு அகன்ற இடமுடையதாக வேண்டிய பரிவாரத்தோடிருக்கத் தகுந்ததாயுள்ளமையான் 'எறிக் காணினன்றிருந்தோங்ககலிடத்து' என்றும் ஆசிரியர் கூறியுள்ளதுங் கண்டறிந்துகொள்க.

256—260. பலவளமுஞ் செறிந்துள்ள மேகஞ்சஞ்சரிக் கின்ற பழமுதிர்சோலைமலைமேலே காணப் பொலிந்துதோன்றிய ஒப்பற்ற திருவுருக்கொண்டு நின்ற முருகக்கடவுள், விண்ணின்று வானவர் வாழ்கவென வாழ்த்தொலிசெய்ய ஞாலமானது மேலாய வின்புற்றுவாழ நன்கு வாழியவென அருளிய முருகக்கடவுள்வாழ்த் துத்திருவகவல் முற்றியது.

வேலுமயிலுந்துணை.

முருகவேள் முன்னிற்க.



Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

மதுரஞ்-சுந்தரபாண்டியனார் அவர்களின் முக்கிய வெளியீடுகள்.

செங்கோன்றரைச் செலவு மூலமும்-உரையும்.

இது தலையூழித் தலைச்சங்க நூல். காப்பியத்தொடராலாகியது. செங்கோன் என்னும் வேந்தன், தலையூழிக் கண்ணிருந்தவன் ஆவன். இவன், கடல்கொள்ளப்பட்டதான எழுநூற்றுக் காவதம் தூரமுள்ள நாற்பத்தொன்பது நாடுகளினிடையேநின்று பெயர்ந்து, வட விமயத்தேவெற்றுக்கொடிநாட்டச்சேறலைஎடுத்தியம்புவது. விலை அணா 2

திருக்குறள் விருத்தியுண் முதற்குறள் விருத்தியுரை.

(அரசஞ்சண்முகனார் உரை.) கற்றல் கேட்டலுடைய நுண்ணுணர்வாளர்க்குறு துணை யாகியது. விலை அணா 5.

முருகக்கடவுள், திருவருண் மாலை.

நூறுபாடல்களுள்ளது. இது அன்பின் சுவைததும்பியஉருக்கமுள்ள பாடல்களால் ஆகியது. அன்பர்கள் வேண்டற்பாலது. விலைஅணா 2.

மூவடி முப்பது—மூலமும் உரையும்.

சங்கப்பலகையை நிலைகுலைத்த இடைக்காடனார் பாடிய "மூவடி முப்பது மூலமும் உரையும்" என்ற ஓர் அரிய நூல். இந் நூலாசிரியரால் குறிப்புரை, ஆசிரியர் வரலாறு முதலிய, தொகுத்து முதலாவதாக வெளிவந்துள்ளது. தொல்காப்பிய வுரையில் எதிர்நூல் என்று பாராட்டா நின்ற நூல் இஃதொன்றேயாகும். முப்பது அதிகாரங்களுடையது. இன்பம், பொருள், அறம், ஒழிபு *என்னுமுறையே நாற்கூறுகொண்டு இலங்குவது. இந்நான்கனுள், முதலாவதான இன்பக்கூறு:—காமம், காமக் கிழத்தி, ஊன்மிசைதல், பொய்யுரை, நாணுமை என்னும் ஐந்ததிகாரங்களையும் இரண்டாவதான பொருட்கூறு:—கல்லாமை, புறப்பொலிவு, வியத்தல், நோநட்பு, குற்றங்காட்டல், நல்குரவு, கலக்கம், தூக்கம், பொச்சாப்பு, ஆசை என்னும் பத்ததிகாரங்களையும், மூன்றாவதான அறக்கூறு:—துறவறவிழிவு, கண்ணறுத்தல், ஈயாமை, கொடுமை, வெகுளி, போலிப்புறமொழி, கான்முளைப்பெருக்கம், கொலை, சூது, குடி என்னும் பத்ததிகாரங்களையும், நான்காவதான ஒழிபுக்கூறு:—தற்றுணையாக்கம், பிணி, அழுகை, மூப்பு, சாக்காடு என்னும் ஐந்ததிகாரங்களையும்கொண்டு பொலிந்துவிளங்குவது. உவர்ந்த கடிதத்தில் 120 பக்கம்உள்ளது. அரும்பெரும் நூலோடுபழகும் மதிநுட்பமுடைய தாங்கள், வியப்புடைய இந்நூலினை அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை அணா 8. கலிக்கோ பைண்டு அணா 12. வி. பி. பி. சார்ஜ்பிரத்தியேகம்.

விலாசம்:— முருகாநந்தம் மருத்து நிலயம் மானேஜர்,
வடக்குக்கோபுரத்துள் கீழ்பக்கம், மதுரை.